முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

## சோபகிருது வருடம் ஆவணி மாதம் 24 திகதி முதல்
## சோபகிருது வருடம் ஆவணி மாதம் 31 திகதி வரை
## (10.09.2023 ஞாயிறு முதல் 17.09.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கண்டேன் கலியினில் ஞானியை
   கந்தவேலன் சூட்சும வடிவமாக
   தொண்டர்கள் படைபெருக்கி இந்தியா தமிழகத்தில்
   தூய வழிகாட்டி அருளும் அரங்கனை போற்றி
2. போற்றியே அகத்திய மகரிஷியும்
   புகலுவேன் இந்தியா தமிழகத்தில்
   ஆற்றல்பட சோபகிருது யாளி திங்கள்
   அறுநான்கு திகதிமேல் முப்பானோர் திகதி வரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன்குறித்த ஆசியுரைப்பேன்
   உரைக்கவே இந்தியா தமிழகத்தில்
   ஊழல் தன்மை அகற்றும் வண்ணம்
4. வண்ணமுடன் ஆளுமைகள் தன்னை
   வல்லமைபட நீதித்துறை கட்டுப்படுத்தி
   எண்ணமதில் நீதி காக்கும் என
   எளியவரும் நம்பும் வண்ணம்
5. வண்ணமுடன் நீதித்துறை பலமுற
   வழிகாட்டியாக மற்றத் துறைகளும்
   எண்ணம் வழி தூய்மை கொண்டு
   எங்கும் மாற்றம் நிகழக் கூடும்
6. கூடாத முறைகேடுகள் அனைத்தும்
   குறிப்பாக உலகுக்கு வெளிவர
   சுடராகப் பத்திரிக்கைகளும் செயல்பட
   சுதந்திர இந்திய தமிழக தேசத்தில்

7. தேசத்தில் குற்றங்கள் அம்பலமாகி
தேசத்தை வஞ்சிக்கும் அபகரிக்கும்
நேசமில்லா செயல்கள் கட்டுப்படும்
நிலவுலகை விட்டே நாளடைவில் அகன்று
8. அகன்று மாற்றம்தனை காணும்
ஆராய்ச்சி அனைத்து வகையிலும்
மகத்துவமுள்ளவர்க்கே வாய்ப்புக்கிட்டி
மண்ணை காக்கும் வளர்க்கும் வண்ணம்
9. வண்ணமுடன் வளர்ச்சித் திட்டங்கள்
வருங்காலம் இந்தியா தமிழகம் கண்டு
விண்ணே வியக்க மாற்றம் காணும்
விரைந்து அழிவுதரும் சக்திகள்
10. சக்திகள் அனைத்தும் முடிவுகண்டு
சரவணப் பெருமான் ஆசிபட
பக்தி சித்திமிக்க ஞானவான்கள்
பரவிப் பெருகிடும் வண்ணம்
11. வண்ணமுடன் நிலைகள் கூடி
வையகமே தேடிவர தேச மாற்றம்
அண்ணல் ஆட்சி ஞான ஆட்சியாக
ஆக்கம்தனை அடைந்து உயரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 24ம் நாள் 10.09.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் 31ம் நாள் 17.09.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

கலியுகத்தினிலே முருகப்பெருமானின் சூட்சும அவதாரமாக ஆறுமுக அரங்க மகா ஞானியை காண்கிறேனப்பா. தொண்டர் படைகளை பெருக்கி தூய வழிதனை காட்டும் ஞானகுருவே ஆறுமுக அரங்க மகா தேசிகனே உம்மை

போற்றி அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் ஆவணி மாதம் **24**ம் நாள் **10.09.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆவணி மாதம் **31**ம் நாள் **17.09.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தேசத்திலே நடக்கும் ஊழல்களை கட்டுப்படுத்தி நீதியை நீதித்துறை நிலைநாட்டி மக்களை காக்கும் என்று மக்கள் நீதி மீது நம்பிக்கை கொள்ளுமாறு நீதித் துறை பலமுடனும் உறுதியுடனும் நடந்து அது தேசத்தின் மற்றைய துறைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி மற்ற துறைகளிலும் நடக்கும் ஊழல்களை அகற்றி தூய்மைபடுத்தினால் தேசமெங்கும் அற்புதமான மாற்றங்கள் உண்டாகுமப்பா.

நாட்டிற்கு ஆகாத முறைகேடுகளை பத்திரிக்கைகள் உலகிற்கு வெளிக் கொண்டு வந்து செயல்பட்டால் தேசத்தில் நடக்கும் குற்றங்கள் அனைத்தும் உலக மக்களின் கவனத்திற்கு அம்பலமாகி தேசத்தினை வஞ்சித்து அபகரிக்கும் செயல்கள் வெகுவிரைவில் கட்டுப்படும் நாள்பட நாள்பட குற்றங்கள் வெகுவாக குறைந்து விடும்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையிலே செய்யப்படும் ஆராய்ச்சி மற்றும் திட்டங்களிலே தகுதி உள்ளவர்களுக்கு வாய்ப்பு கிட்டிடும்படி செயல்பட்டு வளர்ச்சி திட்டங்களை வகுத்திட்டால் அவர்களது அர்ப்பணிப்பால் பல வளர்ச்சிகளை தேசம் அடைந்து விண்ணும் வியக்கும் அளவிற்கு தேசம் மாற்றம் அடையும் உலகினில் வெகு விரைவில் அழிவு தரும் சக்திகள் இனி ஒரு முடிவிற்கு வந்து முருகப்பெருமான் ஆசியால் பக்தியும், சித்திகளையும் பெற்றிட்ட ஞானவான்கள் பரவி பெருகிடுவர். அண்ணல் ஆறுமுக அரங்க மகானை தேடி வந்து அரங்க மகானின் உயர்ஞான கொள்கை ஏற்க பக்தி சித்தி மிக்கவர்கள் அதிகமாகி நாடு செழித்து தேசம் மாற்றம் அடைந்து ஞானத் தலைவன் தலைமையில் ஞான ஆட்சி உருவாகி தேசமே பெருமை அடையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

**–சுபம்–**